# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,878/1 — 1969 නොවැම්බර් 2 වැනි ඉරිද — 1969.11.2

14,878/1 ம் இலக்கம் — 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக்கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. சி 475 — உப் உணவுப்பொருட்கள்

விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினுலும் அதேசட்டத்தின் 3 (2) பிரிவினுலும் எனக்களிக்கப்பட்டுள்ளதத்து வங்களைக் கொண்டு இலங்கைத் தீவின் (உணது) பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி தெவுந்தர வியகே சந்திரசேகரா ஆகிய நான் இக்கட்டளையால் :—

(1) 1969 ம் ஆண்டு யூலை மாதம் 19 ந் தேதி வெளியான 14,863 1 இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1969 ம் ஆண்டு யூலை மாதம் 19 ம் தேதியைக்கொண்ட சி 470 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) இதனேடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3ம், 4ம், பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே இறக்குமதியாளர் ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய இறக்குமதி விலையாகவும், மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்கலாகாதெனவும், உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக :—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக்கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறைவிற்பனையஆகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தமவசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால், அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும், ஆகக்கூடிய விலையையும், வாங்குபவரால் நன்கு பார்க்கக்கூடியவாறு, அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்க மாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக, "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால், ஆக்கக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப்பின் வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.:—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்ல்து சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3ம், 4ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லவு வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்பட்டின, அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1969 ம ஆண்டு நவம்பர் மாதம் 2 ந் திகதியன்று பிற்பகல் 2 15 மணிக்குக் கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

தே வி. சந்திரசேகரா.
பிரதிவிலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு)

அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>இறக்குமதியாளரின் அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய இறக்கு மதி விலை | பத்தி 3<br>மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக் கூடிய மொத்த விலை | பத்தி 4<br>சில்லறை வியாபாரி ஒருவர் இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| கொத்தமல்லி .. .. | — .. | 82 .... | 0 84 |
| சிறு வெண்காயம் .. .. | — .. | 24 0 .. | 0 28 |
| வெண்காயம் (சிறு வெண் காயம் தவிர்ந்த ஏனைய எல்லா ரகமும்) .. | 30 .50 .. | 32.00 .. | 0.34 |

குறிப்பு :(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆக்கக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

(2) இறக்குமதியாளரின் விலையென்பது 10 அந்தரும் அறதகு மேற்பட்ட எடையுடைய விற்பனையைக் குறிப்பதாகும்.

11–1254

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## சுங்க அறிவித்தல் இல. 61/9/413

(250 ஆம் அத்தியாயமான) அரசிறைப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இடப்பட்டதும் 1961 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் தேதிய 12,781 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 14.3.1962 அன்று பிரதிநிதிகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான கட்டளையின்படி 11.3.1969 திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்தில், ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கான மதிப்பிடப்பட்ட எவ். ஓ. பீ. பெறுமதியும் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்கான ஏற்றுமதித் தீர்வை வீதமும் பின்வருவனவாகும்.

சுங்கக் கட்டளைச் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்துமூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் ஏதேனும் விவரணத்தையுடைய இறப்பருக்குச் செலுத்தப்படவேண்டிய தீர்வைகளுடன் இத்தீர்வை மேலதிகமானதாக இருக்கும்.

| இறப்பர் | ரூ. ச. |
|---|---|
| ஒவ்வொரு இருத்தல் ஆர். எஸ். எஸ். தரம் 1 இறப்பருக்கும் எவ். ஓ. பீ. மதிப்பீட்டுப் பெறுமதி .. .. .. .. | 1 26 |
| ஏதேனும் விவரணத்தையுடைய ஒவ்வொரு இருத்தல் இறப்பருக்கும் ஏற்றுமதித் தீர்வை .. .. .. .. | 0 17 |

எனது இல. எ. 781,
மா. ம. சுங்கம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 2 ந் உ.

எ. ச. பண்டிதரத்ன,
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

11–1252

## சுங்க அறிவித்தல் இல. 67/3/101

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் இடப்பட்டதும், 1967 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 22 ஆம் தேதிய 14,775/17 ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 1968.2.22 அன்று பிரதிநிதிகள் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான கட்டளையை ஏற்புடையதாக்கும் நோக்கத்துக்கென இலண்டன் சந்தையிலுள்ள பிலிப்பீன் கொப்பருவுக்கான மதிப்பீட்டு கொ.கா.கே. விலை 1969.11.3 திங்கட்கிழமையன்று தொடங்கும் வாரத்துக்கு, ரூபா 1,235.42 ஆகுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது.

2. கொப்பரு, தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல், உடன் தேங்காய்கள் ஆகியவைக்காகச் செலுத்தப்படவேண்டிய ஏற்றுமதித் தீர்வைகள் பின்வருமாறு :—

| ஒவ்வொரு தொன் கொப்பருவுக்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு தொன் தேங்காயெண்ணெய்க்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு தொன் தேங்காய்த் துருவலுக்குமான ஏற்றுமதித் தீர்வை | ஒவ்வொரு 1,000 தேங்காய்க்குமான ஏற்றுமதித் தீர்வை |
|---|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 387 53 .. | 442 86 .. | 376 09 .. | 96 88 |

3. சுங்கச் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்து மூலமான நியாயப் பிரமாணத்தின் கீழ் அத்தகைய தெங்கம் பொருட்களுக்குச் செலுத்தப்படவேண்டிய தீர்வைகளுடன் மேலதிகமாக இத்தீர்வைகள் இருக்கும்.

எனது இல. 744/22, மா. ம. சுங்கம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 26 ந் உ.

எ. ச. பண்டிதரத்ன,
முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளருக்காக.

11–1253

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.